www.agaram.lk

AL/2016/25-B/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

ඉතිහාසය II (I කොටස)
வரலாறு II (பகுதி I)
History II (Part I)

25-B T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**ஐரோப்பிய வரலாறு - ஆதி காலம் முதல் கி.பி. 1989 வரை**

சுட்டெண்: ...................................

**அறிவுறுத்தல்கள்:**

* இப்பகுதியில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாப்பத்திரத்திலேயே** விடை எழுதுக.
* ஒவ்வொரு வினா தொடர்பாகவும் **ஐவைந்து** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** சரியானது. ஒரு வினாவுக்கு உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து, பின் அதனை இப்பத்திரத்திலேயே **அறிவுறுத்தல்களுக்கமையக் குறிப்பிடுக.**
* இப்பகுதிக்கு **40** புள்ளிகள் வழங்கப்படும்.
* **இரண்டு** பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலங்களாகும்.** உமது விடைத்தாள்களை ஒப்படைக்கும் பொழுது **பகுதி I** இற்கான விடைகளை எழுதிய பின்னர், அதனைப் **பகுதி II** இற்கான விடைத்தாளுடன் **இணைத்து ஒப்படைக்க வேண்டும்.**

## பகுதி I

- **1 - 10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவ் ஐந்தினுள் **ஒன்று** மற்றவையோடு **பொருந்தாது. பொருந்தாததைத்** தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டினுள்** இடுக.

**1.** (1) பிரினீஸ் (2) அல்ப்ஸ் (3) அப்பினைன் (4) கஸ்பியன் (5) கார்ப்பாதியன் (.........)

**2.** (1) அயோனியன் கடல் (2) ஏஜியன் கடல் (3) கரிபியன் கடல் (4) அத்திரியாற்றிக் கடல் (5) மத்தியதரைக் கடல் (.........)

**3.** (1) செயூஸ் (2) அப்போலோ (3) அதீனா (4) அ∴ப்ரோடைற் (5) மினேர்வா (.........)

**4.** (1) தேல்ஸ் (2) அனெக்சிமாண்டர் (3) வேர்ஜில் (4) பைதகோரஸ் (5) ஆர்க்கிமீடீஸ் (.........)

**5.** (1) பெரிக்கிளிஸ் (2) குளோடியஸ் (3) டயக்கிளீசியன் (4) கொன்ஸ்ரன்ரைன் (5) தியோடோசியஸ் (.........)

**6.** (1) ஹிப்போகிரட்டீஸ் (2) பரசெல்ஸ் (3) மைக்கல் ஸர்வேற்றர் (4) தோமஸ் மோர் (5) வில்லியம் ஹார்வி (.........)

**7.** (1) ஹெரடோற்றஸ் (2) சோபோகிளிஸ் (3) திசிடிடீஸ் (4) லிபி (5) ரசிற்றஸ் (.........)

**8.** (1) அமெரிகோ வெஸ்புக்சி (2) வாஸ்கோத பல்போவா (3) ஹெர்னாந்தோ கோட்டீஸ் (4) பிரான்சிஸ்கோ பிசாரோ (5) பிரான்சிஸ் ட்ரேக் (.........)

**9.** (1) கலோன் (2) மிராபோ (3) ல∴பாயெற் (4) அபே சியேஸ் (5) ரோபெஸ்பியர் (.........)

**10.** (1) V.I. லெனின் (2) மக்சிம் கோர்க்கி (3) ஜோசெ∴ப் ஸ்டாலின் (4) நிகிதா குருஷ்ஷேவ் (5) அலெக்சி கொசிஜீன் (.........)

[பக். 2 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



- **11 - 15** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிப்** பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒரு** சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியைத் தெரிந்து அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**11.** (1) பெலோப்போனிசியன் போர் - அதென்ஸ் உம் ஸ்பார்ட்டாவும்
(2) பியூனிக் போர்கள் - ரோமாபுரியும் கார்த்தேஜ் உம்
(3) சிலுவைப் போர்கள் - கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும்
(4) நூற்றாண்டுப் போர் - இங்கிலாந்தும் பிரான்சும்
(5) அமெரிக்க சுதந்திரப் போர் - அமெரிக்காவும் ஸ்பானியாவும் (.........)

**12.** (1) பிளேட்டோ - அக்கடமி
(2) அரிஸ்டோட்டில் - லைசியம்
(3) தோமஸ் அக்குயினாஸ் - சுமா தியோலோஜியா
(4) இராஸ்மஸ் - மடமையின் புகழ்ச்சி (Praise of Folly)
(5) மார்ட்டின் லூதர் - கடவுளின் நகரம் (City of God) (.........)

**13.** (1) ஹப்ஸ்பேர்க் - ஒஸ்திரியா
(2) பேர்பன் - பிரான்ஸ்
(3) பிறஹன்ஸா - போர்த்துக்கல்
(4) ஒறேன்ஜ் - இத்தாலி
(5) உரொமானோவ் - ரஷ்யா (.........)

**14.** (1) லொலாட்ஸ் - இங்கிலாந்து
(2) ஹசயிற்றுகள் - பொஹீமியா
(3) ஹல்வினிச் வாதிகள் - கிரேக்கம்
(4) அனாபப்ற்றிஸ் - ஜேர்மனி
(5) ஹியூஹனோற்ஸ் - பிரான்ஸ் (.........)

**15.** (1) போர்த்துக்கல் - பிறேசில்
(2) ஸ்பானியா - மெக்சிகோ
(3) நெதர்லாந்து - பிலிப்பீன்ஸ்
(4) இங்கிலாந்து - இந்தியா
(5) பிரான்ஸ் - இந்தோ- சைனா (.........)

- **16 - 25** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் என்பவற்றின் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையிலே தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடர் ஒழுங்கிலே **தரப்படவில்லை. Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலிற்கேற்பச் சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் **ஒன்று** சரியானதாகும். சரியான சேர்மானத்தைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**16.**

| X | Y |
|---|---|
| (i) பார்த்தினோன் | A மொஸ்கோ |
| (ii) கொலோசியம் | B பாரிஸ் |
| (iii) சாந்த பீற்றர் பசிலிக்கா | C உரோம் |
| (iv) கிரெம்லின் | D அதென்ஸ் |
| (v) அய்பல் கோபுரம் | E வத்திக்கான் |

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

**17.**

| X | Y |
|---|---|
| (i) ஹெரக்கிளிற்றஸ் | A 'அரசன் சிங்கத்தையும் நரியையும்போல் பாவனை செய்யவேண்டும்.' |
| (ii) ஜேசு கிறிஸ்து | B 'ஒரு ஆற்றில் இருமுறை காலடி வைக்க இயலாது.' |
| (iii) நிக்கோலோ மக்கியாவலி | C 'மனிதன் சுதந்திரமாகப் பிறந்தவன். ஆனால் எங்கும் அவன் விலங்கிலிடப்பட்டுள்ளான்.' |
| (iv) ஜோன் யேக்ஸ் ரூசோ | D 'எல்லா நாடுகளிலும் தொழிலாளர்கள் ஒன்றுபடுக.' |
| (v) கார்ல் மார்க்ஸ் | E 'அரசனுக்குரிய கடமைகளை அவனுக்குச் செய்யுங்கள். கடவுளுக்கு செய்யவேண்டிய கடமைகளை கடவுளுக்குச் செய்யுங்கள்.' |

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

[பக். 3 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**18.**

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | மிலான் பிரகடனம் | A | பெரும்பான்மையான பிரெஞ்சு மக்களின் சமயமாகக் கத்தோலிக்கம் அங்கீகரிக்கப்பட்டமை |
| (ii) | ஒகஸ்பேர்க் சமாதானம் | B | உரிமைசார் கோட்பாடு |
| (iii) | 1801 ஆம் ஆண்டு உடன்படிக்கை (Concordat) | C | கிறிஸ்தவர்களுக்குச் சமய சுதந்திரம் வழங்கியமை |
| (iv) | வியன்னா மகாநாடு | D | தேசிய சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு |
| (v) | வேர்ஸேயில் உடன்படிக்கை | E | 'யார் அரசனோ அவனது சமயம்' |

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

**19.**

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | மஸாச்சியோ | A | இறுதித் தீர்ப்பு |
| (ii) | பொற்றிசெலி | B | அதென்ஸ் சிந்தனையாளர் (School) |
| (iii) | லியனாடோ டாவின்சி | C | வீனஸ்ஸின் பிறப்பு |
| (iv) | மைக்கல் அஞ்சலோ | D | ஆதாமும் ஏவாளும் தோட்டத்திலிருந்து அகற்றப்பட்டமை |
| (v) | ர.்.பேல் | E | இறுதி இராப்போசனம் |

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

**20.**

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | எஸ்ரேற்ஸ் ஜெனரல் | A | ரஷ்யா |
| (ii) | கோட்டீஸ் | B | ஐக்கிய அமெரிக்கா |
| (iii) | டூமா | C | பிரான்ஸ் |
| (iv) | காங்கிரஸ் | D | ஜேர்மனி |
| (v) | ரயிஸ்ராக் | E | ஸ்பானியா |

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

**21.**

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | ஜோன் கல்வின் | A | சட்டங்களின் உண்மையான இயல்புகள் |
| (ii) | தோமஸ் ஹொப்ஸ் | B | மனிதனின் உரிமைகள் |
| (iii) | மொன்ற்றெஸ்கியூ | C | தேசங்களின் செல்வம் |
| (iv) | அடம் ஸ்மித் | D | லெவியதன் |
| (v) | தோமஸ் பெயின் | E | கிறிஸ்தவ சமயக் கோட்பாடுகள் |

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

**22.**

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | ஒளிமயமான புரட்சி | A | சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் |
| (ii) | அமெரிக்கப் புரட்சி | B | அறிவாளிகளின் புரட்சி |
| (iii) | பிரெஞ்சுப் புரட்சி | C | அரசனைப் பாராளுமன்றம் கட்டுப்படுத்தியமை |
| (iv) | 1848 புரட்சி | D | சமாதானம், நிலம், உணவு |
| (v) | ரஷ்யப் புரட்சி | E | 'பிரதிநிதித்துவம் இன்றேல் வரியில்லை' |

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

**23.**

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | றொபேர்ட் வால்போல் | A | இணைக்கப்பட்ட ஜேர்மனியில் முதலாவது சான்சலர் |
| (ii) | ஜோர்ஜ் வாஷிங்டன் | B | இங்கிலாந்தின் முதலாவது பிரதம மந்திரி |
| (iii) | ஒற்றோ வொன் பிஸ்மார்க் | C | பிரான்சின் ஐந்தாவது குடியரசின் முதலாவது ஜனாதிபதி |
| (iv) | சார்ள்ஸ் டி கோல் | D | ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது ஆசிய செயலதிபர் |
| (v) | ஊ தாண்ட் | E | ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதி |

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

**24.**

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | வேர்ஸேயில் உடன்படிக்கை | A | ஹங்கேரி |
| (ii) | சாந்த ஜேர்மேயின் உடன்படிக்கை | B | துருக்கி |
| (iii) | நியூலி உடன்படிக்கை | C | ஒஸ்திரியா |
| (iv) | ற்றியனோன் உடன்படிக்கை | D | ஜேர்மனி |
| (v) | லௌசான் உடன்படிக்கை | E | பல்கேரியா |

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

[பக். 4 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

www.agaram.lk



4175

**25.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | மார்ஷல் ரிற்றோ | A | ஜேர்மன் சமஷ்டி குடியரசின் முதலாவது சான்சலர் |
| (ii) | கிளெமென்ற் அற்லி | B | சோவியத் ஒன்றியத்தின் இறுதியான ஆட்சியாளர் |
| (iii) | கொன்ராட் அடினோர் | C | போலந்து 'சொலிடாறிற்றி' என்ற தொழிற்சங்கத்தின் தலைவர் |
| (iv) | லெக் வலேசா | D | யூகோசிலாவியாவின் ஜனாதிபதி |
| (v) | மிகையில் கொர்ப்பச்சேர்வ் | E | இரண்டாம் உலகப்போரின் பின் இங்கிலாந்தின் முதலாவது பிரதம மந்திரி |

(1) DCEAB (2) CEABD (3) DEACB (4) BEACD (5) EDACB (.........)

- **26 - 30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** அல்லது பல சரியான விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,
  **(A)** யும் **(B)** யும் மட்டும் சரியாயின் ................. **1** எனவும்
  **(B)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் ................. **2** எனவும்
  **(C)** யும் **(D)** யும் மட்டும் சரியாயின் ................. **3** எனவும்
  **(A)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் ................. **4** எனவும்

ஒரு விடை மட்டும் அல்லது **இரண்டிற்கு மேற்பட்ட** விடைகள் சரியாயின் ... **5** எனவும் **அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

| **அறிவுறுத்தல்களின் சுருக்கம்** | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **(A)** யும் **(B)** யும் மட்டும் சரி | **(B)** யும் **(C)** யும் மட்டும் சரி | **(C)** யும் **(D)** யும் மட்டும் சரி | **(A)** யும் **(C)** யும் மட்டும் சரி | ஒரு விடை மட்டும் அல்லது **இரண்டிற்கு மேற்பட்ட** விடைகள் சரி |

**26.** **மேல்வருவனவற்றுள் புராதனகால உரோமாபுரியிடையே நிலவிய பிரபல்யமான அரசியல் முறைகள் யாவை?**
(A) பிரபுக்கள் கூட்டாட்சி (B) மன்னராட்சி (C) பேரரசு ஆட்சி (D) கொடுங்கோன்மை (.........)

**27.** **மேல்வருவனவற்றுள் மேற்கு உரோமப் பேரரசின் மீது படையெடுத்த மிலேச்ச இனக் குழுக்கள் யாவை?**
(A) ஃபீனீசியர் (B) லிடியர் (C) விசிகோத்தியர் (D) வன்டோல்கள் (.........)

**28.** **மேல்வருவனவற்றுள் பிரதிச் சீர்திருத்தவாதத்தின் பிரதான அம்சங்கள் யாவை?**
(A) ஜேசு சபை (B) ஜெனிவாவில் கல்வினிசத் திருச்சபை
(C) ற்றென்ற் சம்மேளனம் (D) மாற்றுக் கருத்துடையவர்களை வன்முறையால் அடக்குதல் (.........)

**29.** **மேல்வரும் ஐரோப்பியத் தலைவர்களுள் வியன்னா மகாநாட்டில் பங்குபற்றியோர் யாவர்?**
(A) மெற்றர்ணிக் (B) நெக்கர் (C) காசல்ரீ (D) மசினி (.........)

**30.** **சர்வதேச சங்கம் தொடர்பான மேல்வரும் கூற்றுகளில் சரியானது / சரியானவை எது / எவை?**
(A) முதலாம் உலகப்போரின் பின் சர்வதேச சங்கம் அமைக்கப்பட்டது.
(B) சர்வதேசத் தகராறுகளைத் தீர்ப்பதும் மீண்டும் போர் ஏற்படுவதைத் தடுப்பதும் சர்வதேச சங்கத்தின் முக்கிய குறிக்கோள்களாகும்.
(C) ஐக்கிய அமெரிக்கா சர்வதேச சங்கத்தின் ஒரு பிரதானமான அங்கத்தவ நாடாகும்.
(D) அபிசீனியா மீது இத்தாலி படையெடுப்பதை சர்வதேச சங்கத்தினாலே தடுக்க முடிந்தது. (.........)

- **31 - 35** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று உரிய தலைப்புடன் **பொருந்தாது. அதனைத்** தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

**31.** **மறுமலர்ச்சியின் பிரதான இயல்புகள் யாவை?**
(1) கிரேக்க, உரோம செல்நெறிப் பண்பாடுகளின் மறுமலர்ச்சி
(2) இலக்கியம், கலைகள் என்பனவற்றில் உலகியல் சார்ந்த நோக்கு
(3) மானிடவாதம்
(4) மார்ட்டின் லூதரின் பேராதரவு
(5) இத்தாலியிலிருந்து பிற ஐரோப்பிய நாடுகளுக்கு மறுமலர்ச்சி பரவியமை (.........)

[பக். 5 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**32.** **நாடுகாண் பயணங்களின் கட்டங்கள்**

(1) போர்த்துக்கல்லில் ஆதியான கடற்பிரயாணங்களிற்கு ஹென்றி நாவிகன் என்னும் அரசனின் ஆதரவு
(2) 1492 இல் கரிபியன் தீவுகளை கிறிஸ்தோபர் கொலம்பஸ் அடைந்தமை
(3) ஸ்பானிய அரசர்களின் ஆதரவோடு வாஸ்கொடகாமா கடற்பிரயாணங்கள் மேற்கொண்டமை
(4) ஆசியாவிற்கான முழுமையான கடல்வழிப் பாதையை வாஸ்காடகாமா கண்டுபிடித்தமை
(5) 1520 - 1521 ஆகிய காலத்தில் பேர்டினன்ற் மகலனுடைய படையினர் பூமியைச் சுற்றிப் பிரயாணம் செய்தமை (.........)

**33.** **1848 இல் புரட்சிகள் ஏற்பட்ட நாடுகள்**

(1) பிரான்ஸ் (2) இத்தாலி (3) ஜேர்மனி
(4) ஒஸ்திரியா (5) ரஷ்யா (.........)

**34.** **இத்தாலியை ஒன்றிணைத்தமையிலுள்ள கட்டங்கள்**

(1) இத்தாலிய ஒன்றிணைப்பு இயக்கத்திற்கு பீர்மன் - சார்டினிய அரசாங்கம் தலைமை தாங்க முற்பட்டமை
(2) 1850 இல் பீர்மன் - சார்டினிய இராச்சியத்தில் மசினி முதலமைச்சரானமை
(3) 1859 இல் ஏற்பட்ட ஒஸ்திரிய - சார்டினியப் போர்
(4) தென் இத்தாலியை ஹரிபோல்டி மீட்டமை
(5) 1870 இல் இத்தாலி ஒன்றிணைக்கப்பட்டமை (.........)

**35.** **இரண்டாம் உலகப்போரின் பின் ஐரோப்பா**

(1) 1949 இல் வட அத்திலாந்திக் உடன்படிக்கை நிறுவனம் அமைக்கப்பட்டமை
(2) 1949 இல் ஐரோப்பிய நாடுகள் நிறுவனம்(Council of Europe) அமைக்கப்பட்டமை
(3) 1955 இல் வோர்ஸோ உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டமை
(4) 1957 இல் ஐரோப்பிய பொருளாதார சமூகம் (European Economic Community) அல்லது ஐரோப்பிய பொதுச் சந்தை (European Common Market) அமைக்கப்பட்டமை
(5) டீ - கோலின் ஆதரவுடன் பிரித்தானிய ஐரோப்பிய பொருளாதார சமூகத்தில் இணைந்தமை (.........)

- **36 - 40** வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருந்துவது எதுவென்பதைத் தெரிந்து, **அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 1 | சரியானது | பிழையானது |
| 2 | சரியானது | சரியானது |
| 3 | பிழையானது | பிழையானது |
| 4 | பிழையானது | சரியானது |
| 5 | சரியானது | சரியானதும், **முதலாம்** கூற்றினை நன்றாக விளக்குவதுமாகும். |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| **36.** | ஐரோப்பிய தேசியவாத மரபினையும் மானிடவாத மரபினையும் புராதன காலக் கிரேக்கர் உருவாக்கினார்கள். | மகா அலெக்ஸாந்தர் உரோமப் பேரரசின் முதன்மையான அரசனாவான். | (.........) |
| **37.** | மறுமலர்ச்சிக் காலத்தில் ரோமானெஸ்க், கோதிக் கட்டடக்கலை மரபுகள் வளர்ச்சியடைந்தன. | ஜோன் லொக் 'அரசாங்கம் பற்றிய இரு பனுவல்கள்' (Two treatises of government) மூலம் சர்வாதிகார ஆட்சியை நியாயப்படுத்தினார். | (.........) |
| **38.** | பழைய ஆட்சி முறையில் திருச்சபை, இராணுவம், அரசாங்கம் ஆகியவற்றில் மேலான பதவிகளைக் கொண்டிருந்த பிரெஞ்சுப் பிரபுக்கள் வர்க்கத்தின் மேலாதிக்கம் பிரெஞ்சுப் புரட்சியின் விளைவாக முடிவுற்றது. | பிரெஞ்சுப் புரட்சிக் காலத்திற் பிரபுக்கள் மானிய முறையிலான உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் பறிகொடுத்து அவர்களின் நிலங்களும் அபகரிக்கப்பட்டுச் செல்வாக்கும் கட்டுப்படுத்தப்பட்டதால் சாதாரணமான குடிமக்களாயினர். | (.........) |
| **39.** | பிரான்ஸ் பேர்டினன்ற் கோமகன் சரஜிபோ என்னுமிடத்தில் படுகொலை செய்யப்பட்டமையே இரண்டாம் உலகப்போர் தொடங்குவதற்கு ஏதுவான காரணமாகும். | ஜப்பானியர் பேர்ள் ஹாபர் மீது தாக்குதல் நடத்தியமையால் ஐக்கிய அமெரிக்கா இரண்டாம் உலகப்போரில் ஈடுபட்டது. | (.........) |
| **40.** | இரண்டாம் உலகப்போரின் பின்பு ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு, ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு என்னும் இராச்சியங்களாக ஜேர்மனி பிரிக்கப்பட்டது. | மிகையில் கொர்ப்பச்சேவ் பின்பற்றிய உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளினால் பனிப்போர் முடிவுற்றது. | (.........) |

**

[பக். 6 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

ඉතිහාසය II (II කොටස)
வரலாறு II (பகுதி II)
History II (Part II)

25-B T II

## ஐரோப்பிய வரலாறு - ஆதி காலம் முதல் கி.பி. 1989 வரை

**அறிவுறுத்தல்கள்:**

※ **முதலாம்** வினாவுக்கும் வேறு ஏதாவது **மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(**முதலாம்** வினாவுக்கு விடையளிப்பதற்கு **ஐரோப்பாவின் புறவுருவப்படம்** வழங்கப்படும்.)

### பகுதி II

**1.** உமக்கு வழங்கப்பட்ட புறவுருவப்படத்திலே மேலே தரப்பட்ட **இடங்கள் எல்லாவற்றையும் குறித்துப் பெயரிட்டு,** அவற்றுள் எவையேனும் **இரண்டிற்குச்** சுருக்கமான வரலாற்றுக் குறிப்புகள் எழுதுக.

(i) கோர்சிகா (ii) வியன்னா (iii) பெல்ஜியம் (iv) பிரினீஸ்
(v) லண்டன் (vi) போல்டிக் கடல் (vii) டனியூப் நதி (viii) ஜிப்ரோல்ற்றர் நீரிணை

*(சரியாகக் குறித்துப் பெயரிட்ட ஒவ்வொன்றுக்கும் **01** புள்ளி; சிறுகுறிப்பு ஒவ்வொன்றுக்கும் **05** புள்ளிகள்)*

**2.** (i) கிரேக்க நகர அரசுகளின் பிரதான அம்சங்களைப் பரிசீலனை செய்க. *(06 புள்ளிகள்)*

(ii) தத்துவம், இலக்கியம் ஆகிய துறைகளில் புராதன கிரேக்கர்களின் சாதனைகளைப் பரிசீலனை செய்க. *(08 புள்ளிகள்)*

**3.** "தேசிய அரசுகளின் எழுச்சி அரசியல் துறையில் ஐரோப்பா நவீன காலத்திற்கு மாற்றமடைந்தமையின் ஓர் அடையாளமாகும்."

(i) தேசிய அரசுகளின் எழுச்சிக்கு ஏதுவான **இரண்டு** காரணங்களைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) தேசிய அரசின் பிரதானமான அம்சங்களைச் சுருக்கமாகப் பரிசீலனை செய்க. *(04 புள்ளிகள்)*

(iii) இங்கிலாந்தில் **அல்லது** ஸ்பானியாவில் தேசிய அரசு எழுச்சி பெற்றமையிலுள்ள பிரதானமான கட்டங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. *(08 புள்ளிகள்)*

**4.** "முப்பதாண்டுப் போர் அடிப்படையில் சமயத் தகராறுகள் பற்றியதாயினும் ஓரளவிற்கு அரசியல் போராட்டங்களும் அடங்கியிருந்தன." முப்பதாண்டுப் போர் ஏற்பட ஏதுவான காரணங்கள் மற்றும் அதன் பிரதானமான கட்டங்கள் என்பன தொடர்பாக இக்கூற்றினை ஆராய்க. *(14 புள்ளிகள்)*

**5.** (i) கைத்தொழிற் புரட்சி முதன் முதலாக இங்கிலாந்தில் ஏற்படுவதற்கு ஏதுவான காரணிகளை ஆராய்க. *(06 புள்ளிகள்)*

(ii) கைத்தொழிற் புரட்சியின் பிரதானமான விளைவுகளைப் பரிசீலனை செய்க. *(08 புள்ளிகள்)*

**6.** "நெப்போலியன் போனபார்ட் பிரெஞ்சுப் புரட்சியின் பல சாதனைகளை முன்னெடுத்துச் சென்றான்."

(i) நெப்போலியன் போனபார்ட் பிறந்த தீவின் பெயரைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*

(ii) 1796, 1797 ஆகிய ஆண்டுகளில் அவனுடைய தலைமையில் படையெடுப்புகளுக்கு இலக்காகிய நாடுகள் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(iii) அவன் பிரான்சில் அதிகாரத்தைக் கைப்பற்றிய விதத்தினை சுருக்கமாகக் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

(iv) பிரெஞ்சுப் புரட்சியின் சாதனைகளை நெப்போலியன் போனபார்ட் எவ்வளவு தூரம் முன்னெடுத்துச் சென்றான் என்பதை அவனது உள்நாட்டுக் கொள்கை தொடர்பாகப் பரிசீலனை செய்க. *(08 புள்ளிகள்)*

[பக். 7 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**7.** "ஜேர்மனியை ஒன்றிணைப்பதில் பிரதான பங்கு கொண்டவர் பிஸ்மார்க்"

(i) ஜேர்மனியை ஒன்றிணைப்பதில் தலைமை தாங்கிய ஜேர்மன் அரசினைப் பெயரிடுக. *(01 புள்ளி)*

(ii) அந்த அரசின் தலைமையில் உருவாக்கப்பட்ட சுங்கவரி ஒன்றியத்தின் பெயரைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*

(iii) ஜேர்மனியை ஒன்றிணைப்பதற்கு எதிராக இருந்த தடைகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

(iv) ஜேர்மனி ஒன்றிணைப்பு இயக்கத்தின் பிரதான கட்டங்களை அடிப்படையாகக் கொண்டு ஜேர்மனியை ஒன்றிணைப்பதில் பிஸ்மார்க் பின்பற்றிய நடைமுறைகளை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. *(08 புள்ளிகள்)*

**8.** (i) 1917 பொல்ஷெவிக் புரட்சி ஏற்பட்டமைக்கு ஏதுவான பிரதான காரணிகளைப் பரிசீலனை செய்க. *(08 புள்ளிகள்)*

(ii) ரஷ்யாவில் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்பு பொல்ஷெவிக் குழுவினர் எதிர்நோக்கிய பிரதானமான சவால்களைப் பரிசீலனை செய்க. *(06 புள்ளிகள்)*

**9.** **(A)** பகுதிக்கு **அல்லது** **(B)** பகுதிக்கு மட்டும் விடை எழுதுக.

**(A)** இரண்டாம் உலகப் போரின் பிரதானமான விளைவுகள் யாவை? *(14 புள்ளிகள்)*

**(B)** மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினது** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறு குறிப்புகள் எழுதுக.

(i) 1688 ஆம் ஆண்டுப் புரட்சி

(ii) கர்தினால் ரிச்சலியூ

(iii) கமிலோ டி கபூர்

(iv) நவ ஏகாதிபத்தியம்

(v) ஐக்கிய நாடுகள் சபை

(vi) பனிப்போர்

*(ஒவ்வொரு குறிப்புக்கும் 07 புள்ளிகள் வீதம்)*

* * *

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk

www.agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk

agaram.lk

AL/2016/25-B/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka


අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

ඉතිහාසය II
வரலாறு II
History II

25-B T

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. 1

විභාග අංකය / சுட்டெண் / Index No. ..................................




Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!